# இஸ்லாம் கூறும் விவாகரத்து

K.M. அப்துல் ஹமீது, துவாக்குடி

இஸ்லாம் மனிதர்களுக்கு வழங்கியுள்ள அனைத்து சட்டங்களும் எளிமையானவை, எக்கால கட்டத்திலும் பின்பற்றகூடியவை என்பதை எல்லாம் வல்ல ஏக நாயகனுடைய திருமறை குர்ஆன் மூலமும் இறுதித்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் பொன் மொழிகளான ஹதீஸ் மூலமும் தெள்ளத் தெளிவாக விளங்கி கொள்ளலாம்.

ஆனால் இஸ்லாம் மேல் பழி சுமத்த வேண்டும் என்ற தீய நோக்கம் கொண்ட ஒரு சிலர் மட்டுமே இஸ்லாமிய சட்டங்கள் காட்டுமிராண்டிதனமான சட்டம் என்று அவதூறு பரப்பி வருகிறார்கள். அவர்களுக்காகவும், முஸ்லிம்களின் அறிஞர்களும் பாமர மக்களும் விவாகரத்து சட்டம் பற்றி சரியாக அறியாத காரணத்தால், கணவனுக்கு மனைவியை பிடிக்கா விட்டால் **தலாக்! தலாக்!! தலாக்!!!** என்று போனில், லெட்டரில் கூறி உறவை முறித்து விட்டு இருப்பதால், அவர்களுக்காகவும், மார்க்க அறிஞர்கள் **'தலாக்'** என்ற வார்த்தையை வாயால் சொல்வதால் பாவம் என்று மக்களை பயமுருத்தி வைத்து உள்ளதால், அவர்களுக்காகவும், தொகுக்கப்பட்டதே இக்கட்டுரையின் நோக்கம். குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமான கருத்துக்கள் என்னையும் அறியாமல் இடம் பெற்று இருந்தால் சுட்டிக்காட்டும்படி உங்களை அன்புடன் கேட் டுக் கொள்கிறேன்.

கேள்வி : கணவனுக்கு மனைவியை; மனைவிக்கு கணவனை பிடிக்காவிட்டால் இஸ்லாம் கூறும் சட்டம் என்ன? போனில், லெட்டரில் தலாக், தலாக், தலாக் என்று கூறினால் திருமண உறவு முறிந்து விடுமா? நேரில் தான் சொல்ல வேண்டுமா? தலாக், தலாக், தலாக் என்று கூறினால் மூன்று தலாக் விட் டு விட்டதாக மார்க்க அறிஞர்கள் கூறுவது சரியா? கணவன் மனைவி பேச்சை, மனைவி கணவன் பேச்சை கேட்காவிட்டால் தலாக் விடலாமா? தலாக் என்று சொல்வது பாவம் என்று ஆலிம்கள் மக்களை பயமுறுத்தி வைத்துள்ளார்களே சரியா?

பதில் : திருமண உறவு தாய் தந்தை உறவை போல் நிரந்தர உறவு இல்லை என்பதை முதலில் விளங்கி கொள்ளவேண்டும்.

திருமணம் என்பது **'வாழ்க்கை ஒப்பந்தம்'** தான் எப்போது கணவனுக்கு மனைவியை பிடிக்கவில்லையோ, அப்போது சேர்ந்து வாழ இஸ்லாம் கூறும் பல அறிவுரைகளை பின்பற்றி பார்த்து விட்டு கடைசியாக தான் இஸ்லாம் விவாகரத்து செய்ய கட்டளையிடுகிறது தவற உடனே தலாக் கூறி விட சொல்லவில்லை. அதே போல் மனைவிக்கு கணவனை பிடிக்கா விட்டால் பல அறிவுரைகள் கூறும்படி இஸ்லாம் கூறவில்லை எந்த காரணமும் கேட்காமல் ஜமாஅத் மூலம் குலா விட இஸ்லாம் கட்டளையிடுகிறது என்பதை பிற மத்தவர்கள் விளங்கி கொள்ளவேண்டும்.

மற்ற சமுதாயத்தவர்கள் கூறுவது போல கணவனே கண் கண்ட தெய்வம், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன், என் புருசன் எனக்கு மட்டும்தான் என்று இஸ்லாம் கூறவில்லை. மாறாக கோபத்தில் மனைவியை தலாக் கூறுவதை இஸ்லாம் கண்டிப்பதுடன் பல சந்தர்பங்களை தந்து சேர்ந்து வாழும்

வழிமுறைகளை கூறும் இஸ்லாம் எதற்கும் ஒத்து வராவிட்டால்தான் திருமண உறவை முறிக்க கட்டளையிடுகிறது.

கணவன் இஸ்லாம் கூறும் அறிவுரைகளை கூறியும் மனைவி சேர்ந்து வாழாவிட்டால், திருந்தி சேர்ந்து வாழா விட்டால்தான் திருமண உறவை தலாக் மூலம் ரத்து செய்யவேண்டும்.

கணவனுக்கு மனைவியை பிடிக்காவிட்டால் **'தலாக்'** மனைவிக்கு கணவனை பிடிக்கா விட்டால் **'குலா'** என்று திருமண பிரிவு சட்டத்துக்கு இஸ்லாம் பெயர் சூட்டி உள்ளது. அல்லாஹ்வும், ரசூலும் தலாக் என்று கூறி இருப்பதால் அதை வாயால் சொல்வது பாவமில்லை என்பதை விளங்கி கொள்ளலாம்.

தலாக் தலாக் தலாக் என்று போனில், லெட்டரில் கூறினால் திருமண உறவு முறியாது, நேரில்தான் சொல்லவேண்டும் மூன்று சந்தர்பத்தில் மூன்று தடவையாக தலாக் கூறவேண்டும். தலாக், தலாக், தலாக் என்று வாயால் நேரில் சொல்லி இருந்தாலும் அது ஒரு தலாக் தான் மீண்டும் சேர்ந்து வாழ வாய்ப்பு உள்ளது.

**1. முதலில் ஒரு தலாக் கூறவேண்டும்,**
**3 மாதத்திற்குள் சேர்ந்து வாழலாம்.**

**2. இரண்டாவது ஒரு தலாக் கூறவேண்டும்,**
**3 மாதத்திற்குள் சேர்ந்து வாழலாம்.**

**3. மூன்றாவது ஒரு தலாக் கூறி விட்டால் சேர்ந்து**
**வாழ முடியாது.**

மனிதர்களை அல்லாஹ் அவசரக் காரணாகவும், கோபக்காரணாகவும் படைத்துள்ளான். மனைவி ஏதோ ஒரு ஜாபகத்தில் சாப்பாட்டிற்கு உப்பு போட மறந்து விட்டால் கூட கோபப்படுகிறான். அது போல் ஒரு செயலை செய்யும் போது குர்ஆனை, ஹதீஸை பார்க்காமல் அவசரமாக எதையும் செய்து விட்டு பிறகு கைசேதப்படுபவனாக இருக்கிறான் என்றுதான் முன் கூட்டியே அறிந்த ரப்புலாலமீன் 'தலாக்' சட்டத்தை மூன்று சந்தர்பத்தில் கூறி சேர்ந்து வாழ வழி செய்துள்ளான். (அல்ஹம்துலில்லாஹ்) இப்படி செய்யாமல் தலாக், தலாக், தலாக் என்று சொன்ன உடனே திருமண உறவை முறைத்து கொள்ள சட்டம் தந்து இருந்தால் உலகில் ஆண்கள் திருமணம் முடிக்க பெண்கள் இல்லாத நிலையும், பெண்கள் ஆண்களை திருமணம் முடிக்க பயப்படக்கூடிய நிலையும் ஏற்பட்டு இருக்கும் திருமண உறவு நீடிக்கவேண்டும் என்பதுதான் இறைவனின் விருப்பமாகும். தலாக் பற்றி அல்லாஹ் கூறுவதை பார்ப்போம்.

**நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள் மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மண நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும், கிருபையையும் ஆக்கி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்தார்க்கு இதில் நிச்சயமாக பல அத்தாட்சிகளிருக்கின்றன.** *அல்குர்ஆன் 30:21*

**(மீட்டுக் கொள்ள உரிமை பெற்ற) தலாக் இரு தடவையாகும். பின்னர் முறைப்படி தடுத்து வைத்து கொள்ள**

**லாம். மூன்றாவது முறையாக தலாக் கூறி நன்முறையில் விட்டு விடலாம். இன்னும் நீங்கள், அவர்களுக்கு கொடுத்த மஹர் உடை மற்றும் எந்த பொருளையும் எடுத்து கொள்வது ஆகுமானதல்ல.** *அல்குர்ஆன் 2:229*

**மேலும் தலாக் சொல்லப்பட்ட பெண்கள் மூன்று மாத விடாய்களை எதிர்பார்த்திருப்பார். அவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் அவர்களுடைய கர்ப்ப பைகளில் அல்லாஹ் படைத்திருப்பதை மறைப்பது அவர்களுக்கு ஆகுமானதல்ல. மேலும் மீட்கக் கூடிய தலாக் சொல்லிய அவர்களின் கணவர்களை இணக்கத்தை நாடினால் அதற்குரிய தவனை காலத்தில் அவர்களை மனைவிகளாகத் திருப்பிக் கொள்ள மிகவும் உரிமையுடையவர்கள் (மனைவியரான) அவர்களின் மீதுள்ள கடமைகள் போன்று அவர்களுக்கு முறைப்படி உரிமை உண்டு ஆண்களுக்கு (பெண்களாகிய) அவர் மீது ஒரு படித்தரமுண்டு அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன் தீர்க்கமான அறிவுடையவன்.** *அல்குர்ஆன் 2:228*

**அனுமதிக்கப்பட்ட விஷயங்களிலேயே 'தலாக்' தான் அல்லாஹ்வுக்கு மிகவும் கோபமூட்டக்கூடியது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரழி) அறிவிக்கிறார்கள்.** *நூல் : அபூதாவூது, இப்னு மாஜா, (புலூகுல் மராம் 1099)*

**ஸாபித் இப்னு கைஸ்(ரழி) அவர்களது மனைவி அவரிடமிருந்து குல்வு (விவாகரத்து) கேட்டார் எனவே நபி (ஸல்) அவர்கள் அவருக்கு ஒரு மாதவிடாய் காலத்தை 'இத்தா' என நிர்ணயித்தார்கள்.** *நூல் : அபூதாவூது, திர்மிதி*

மேற்கண்ட குர்ஆன், ஹதீஸ்களை பார்க்கும் போது 'தலாக்' ஒரு அவசரமாக கூறும் சட்டம் அல்ல; ரொம்பவும் யோசித்து செய்ய வேண்டிய ஒரு சட்டம் என்பதை விளங்கலாம்.

கணவன், மனைவிக்கு இடையில் சண்டை சச்சரவு ஏற்பட்டால் முதலில் இஸ்லாம் கூறும் சட்டங்களை ஆதாரத்துடன் பார்ப்போம்.

**1. உறவினர்கள், கனவன், மனைவியை
சமாதானம்படுத்தி சேர்த்து வைக்கவேண்டும்.**

**2. கணவன், மனைவியை படுக்கையிலிருந்து
பிரித்து வைக்கவேண்டும்.**

**3. கணவன், மனைவி இருவருக்கும் உபதேசம்
மூலம் ஒற்றுமை ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டும்.**

**4. கணவன், மனைவி தவறு செய்து விட்டால்
சாட்சிகள் நிரூபிக்கப்பட வேண்டும் இவற்றிற்கு
பிறகு தலாக் விடவேண்டும்.**

**5. ஒரு தலாக் கூறவேண்டும், 3 மாத விடாய்க்குள்**

திரும்ப சேர்ந்து வாழலாம், பிறகு பிரச்சனை ஏற்பட்டால் 2வது தடவை தலாக் விட வேண்டும் 3 மாதத்திற்கும் திருப்பி கொள்ளலாம் 3வதாக தலாக் விட்டு விட்டால் சேரமுடியாது. தலாக் விடப்பட்ட மனைவி வேறு ஒருவரை திருமணம் முடித்து அவர் விரும்பி முன்பு போல் தலாக் விட்டால்தான் சேர்ந்து திருமணம் செய்து வாழ முடியும்.

6. கணவன் தலாக் விட்டால் கொடுத்த பொருளை கேட்க கூடாது.

7. மனைவி குலா விட்டால், மஹரை பொருளை திரும்ப கொடுக்கலாம் என்பதை ஆதாரத்துடன் பார்ப்போம்.

அல்லாஹ் (தன்னுடைய சட்டங்களை) உங்களுக்கு தெளிவாக விளக்கவும் உங்களுக்கு முன்னிருந்த நல்லவர்கள் சென்று நேரான வழிகளில் உங்களையும செலுத்தி உங்களது தவ்பாக்களை (பாவமன்னிப்பை) அங்கீகரித்து விடவும் நாடுகிறான். அல்லாஹ் நன்கறிந்தவன் தீர்க்கமான அறிவுடையவன். *அல்குர்ஆன் 4:26*

இன்னும் கணவன் மனைவியாக இருவருக்கும் பிணக்குண்டாகி பிளவை (பிரிவை) நீங்கள் அஞ்சினால் அப்போது அவன் குடும்பத்தாரில் ஒரு மத்தியஸ்தரையும், அவன் குடும்பத்தில் ஒரு மத்தியஸ்தரையும் நீங்கள் ஏற்படுத்தி அனுப்புங்கள் அவ்விருவரும் (இவர்களுக்குள்) சமாதானத்தை உண்டு பண்ண நாடினால் அல்லாஹ் இவ்விருவரையும் ஒற்றுமையாக்கி விடுவான். *அல்குர்ஆன் 4:35*

இன்னும் ஒரு பெண் தன் கணவனிடமிருந்து வெருப்பையோ அல்லது புறக்கணிப்பையோ பயந்தாளாநால் ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவதில் அவ்விருவர் மீதும் குற்றமில்லை. சமாதானமே மேலானது. *அல்குர்ஆன் 4:128*

....... இன்னும் அப்பெண்களாகிய அவர்களின் எவர்கள் மாறுபாட்டை அஞ்சுகிறீர்களா அப்போது அவர்களுக்கு நல் உபதேசம் செய்யுங்கள் அவர்கள் திருந்தாவிட்டால் படுக்கையிலிருந்து அவர்களை வெறுத்து ஒதுக்கி விடுங்கள். அதிலும் அவர்கள் சீர் திருந்தா விட்டால் அவர்களை காயம் ஏற்படாதவாறு லேசாக அடியுங்கள். அதனால் அவர்கள் உங்களுக்கு கீழ்ப்படிந்து விட்டால் மற்ற எந்த நடவடிக்கையும் எ டுக்காதீர்கள். *அல்குர்ஆன் 4:34*

கணவன் மனைவி மானக்கேடான விஷயத்தை யார் செய்தாலும் நான்கு சாட்சிகள் கூறும் வரை நம்பாதீர்கள் நான்கு சாட்சிகள் இல்லாமல் திருமண உறவை முறைப்பது இந்த விஷயத்தில் பாவமாகும். *அல்குர்ஆன் 4:15,16*

மேலும் ஒரு மனைவியை நீக்கி விட்டு அவன் இடத்தில் மற்றொரு மனைவியை மாற்றி மனந்து கொள்ள

**நீங்கள் நாடினால் (நீக்கி விட விரும்பும்) அவர்களுக்கு ஒரு பொற்குவியலையே கொடுத்த போதிலும், அதிலிருந்து எதனையும் நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள் அபாண்மாகவும், பகிரங்கப் பாவமாகவும் அவனுக்கு நீங்கள் கொடுத்ததை நீங்கள் திருப்பி எடுக்கிறீர்களா?** *அல்குர்ஆன் 4:20*

ஸாபித் இப்னு கைஸ்(ரழி) **அவர்களது மனைவி நபி(ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே ஸாபித் இப்னு கைஸ் அவர்களை அவர்களது ஒழுக்கத்திலோ மார்க்கத்திலோ நான் குறை ஏதும் கூறவில்லை. ஆனால் இஸ்லாத்தில் இருந்து கொண்டு இறை நிராகரிப்பை (இறைவனுக்கு மாறு செய்வதை) வெறுக்கிறேன் என்று கூறினார். அதற்கு அப்படியானால் (அவன் மஹராக உனக்களித்த) அவருடைய தோட்டத்தை அவரிடம் திரும்ப கொடுக்கிறாயா? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் கொ டுக்கிறேன் என்றார். அப்போது நபி(ஸல்) அவர்கள் (ஸாபித் இப்னு கைஸிடம்) உன்னுடைய தோட்டத்தைப் பெற்றுக் கொண்டு இவரை ஒட்டு மொத்தமாக விட்டு விடு என்று கூறினார்கள்.** *அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரழி), நூல் : புகாரி*

இதுவரை இஸ்லாம் கூறும் விவாகரத்து பற்றி பார்த்தோம். தொட்டதற்கெல்லாம் தலாம் என்று கூறி பெண் களை ஆண்களும்; குலா என்று கூறி ஆண்களை பெண்களும் பயமுறுத்தி மிரட்ட தேவைஇல்லை. முஸ்லிம்களுக்கு இஸ்லாம் வழங்கி உள்ள விவாகரத்து சட்டம் மிகவும் எளிமையானவையே! உலகில் முஸ்லிம்கள்தான் குறைவாக விவாகரத்து செய்துள்ளனர்கள் என்பதை நாடறியும். பிற மதத்தவர்கள் விவகாரத்து சட்டம் கடுமையாக இருப்பதால் தான் கோர்ட்டுக்கு விவாகரத்து கோரி வருசக்கணக்கில் அலைய வேண்டி உள்ளது. கோர்ட்டுக்கு போனாலும் வக்கில்கள் பெண்களை கேவலமாக கேள்வி மேல் கேள்வி கேட்பதால் பல பெண்கள் கோர்ட் சென்று விவாகரத்து கோர அஞ்சுகிறார்கள்.

இன்னும் சிலர் (மாமனார், மாமியார், கணவன்) பெண்ணை கொலை செய்து விட்டு, தற்கொலை செய்து கொண்டதாக கொலையை தற்கொலையாக மாற்றி விடுகின்றனர். இந்நிலை இஸ்லாத்தில் இல்லை, மாறாக, கணவனுக்கு, மனைவியை, பிடிக்காவிட்டால் உடனே விவகாரத்து செய்து விடலாம் கோர்ட்டுக்கு அலயவும் தேவை இல்லை; பெண்ணுக்கு கணவனை பிடிக்காவிட்டால் குலா விட்டு விடலாம். தலாக் விடப்பட்ட தம்பதிகளுக்கு குழந்தை இருப்பின் கணவனே பராமரிப்பு விலவை ஏற்று கொள்ள இஸ்லாம் கூறுகிறது.

திருமணம் உறவை முறித்த பிறகு ஆண்கள், பெண்கள் மறுமணம் செய்து கொள்ளும் அழகிய வழியையும் இஸ்லாம் மார்க்கம் வழங்கி உள்ளது.

எனவே காழ்ப்புணர்ச்சி காரணமாக இஸ்லாம் பற்றி தவறாக விமர்சனம் செய்பவர்களின் பேச்சை கேட்காமல் திருகுர்ஆன் தமிழாக்கத்தையும், நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளின் நூல்களையும் படித்து உண்மை நிலையை அறிந்து கொள்ளுமாறு மாற்று மத சகோதரர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். முஸ்லிம்கள், பெரியார்கள், முன்னோர்கள், ஆலிம்கள் கூறுவதை கேட்டு குழப்பமடையாமல் குர்ஆன், ஹதீஸை படித்து அதன்படி வாழ்ந்து மரணிக்க எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக! ஆமீன்.